**முதன்மை சார்பு நீதிமன்றம், திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை.எஸ்.மீனாட்சி., பி.ஏ.பி.எல்.(Hons.,)**

**முதன்மை சார்பு நீதிபதி, திண்டுக்கல்.**

**2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ம் நாள் திங்கட்கிழமை**

**HMOP No.144/2023**

**(CNR No. TNDG040014732023)**

-----------

திருமதி.G.கிருபா ..... மனுதாரர்

/எதிர்/

திரு. R.வெங்கட்ராமன் ..... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 01.08.2024-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 28.08.2024-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.G.கார்த்திகேயன் மற்றும் திரு.V.விக்னேஷ்வர் ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், எடுத்துரைப்பு இல்லாததாலும் எதிர்மனுதாரரை எதிரவரில்லா நிலைக்குட்படுத்தப்பட்டும், மனுதாரர் தரப்பில் ஆற்றிய வாதுரைகளைக் கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**ஆணையுரை**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.11.2018-ஆம் தேதி கும்பகோணம் தாலுகா திருநாகேஸ்வரம் அருள்மிகு வேங்கடாசலபதி திருக்கோவிலில் இரு தரப்பு பெற்றோர்கள் மற்றும் ஊர் பெரியோர்களின் முன்னிலையிலும் ஜாதி முறைபடியும் நடந்த திருமணத்தை ரத்து செய்யக்கோரி, இந்து திருமணச்சட்டம் பிரிவு.13(1)(ia)-ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02.மனுதாரரின் மனு உரை சுருக்கம்.**

மனுதாரருக்கும். எதிர்மனுதாரருக்கும் கும்பகோணம் தாலுகா திருநாகேஸ்வரம் அருள்மிகு வேங்கடாசலபதி திருக்கோவிலில் கடந்த 11.11.2018-ம் தேதி இரு தரப்பு பெற்றோர்கள் மற்றும் ஊர் பெரியோர்களின் முன்னிலையிலும் ஜாதி முறைபடியும் திருமணம் நடைபெற்றது. அதன் பின்பு மனுதாரரும், எதிர்மனுதாரரும்

எதிர்மனுதாரரின் வீட்டில் கணவன் மனைவியாக 1 வருடங்கள் மட்டுமே வாழ்ந்து வந்தனர். அவ்வாறு வாழ்ந்து வந்த நிலையில், அடிக்கடி மனுதாரரை எதிர்மனுதாரர் பிடிக்கவில்லை என்றும், உடனடியாக விவாகரத்து செய்து விடும்படியும் இஷ்டம்போல் வாழ்ந்து கொள்வதாக கூறிவந்தார். இதனால் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் சென்று ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டதற்கு ஆமாம் நான் அப்படித்தான் நீ எனக்கு தேவை இல்லை என்று கூறி மனுதாரரை எதிர்மனுதாரர் மனுதாரரின் பெற்றோர் வீட்டில் கொண்டு வந்து கடந்த 01.01.2020 தேதி விட்டு சென்றுவிட்டார். அதன் பிறகு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் உறவினர்கள் ஊர் பெரியவர்கள் சமரசம் பேசியும் மீண்டும் ஒன்றாக சேர்த்து வைக்க முயற்சி செய்தனர். ஆனால், எதிர்மனுதாரரை மனுதாரர் அழைக்கும்பொழுது எதிர்மனுதாரர் வரமாட்டேன் என்றும், மனுதாரரை பேசக்கூடாது என்றும் கூறி இல்லற வாழ்க்கை வாழாமலும் தொடர்ந்து மறுத்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 25.07.2021ம் தேதி எதிர்மனுதாரர் ஊர் முக்கியஸ்தர்களுடன் ரூ.100 மதிப்புள்ள பத்திரத்தில் திருமண விவாகரத்து பத்திரம் தயார் செய்து திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, செந்துறை கிராமத்தில் உள்ள மனுதாரரின் வீட்டிற்கு வந்து, எதிர்மனுதாரர் அவரது பொருட்களை மனுதாரரிடம் இருந்து வாங்கி கொண்டும். மனுதாரரின் நகைகள் மற்றும் பண்ட பாத்திரங்களை கொடுத்து விட்டும், மேற்படி பத்திரத்தில் மனுதாரரையும் கையெழுத்து போட வற்புறுத்தியும், அவரது பெற்றோர்களையும் சாட்சி கையெழுத்து போடவும் வற்புறுத்தினார். மனுதாரரும் கையெழுத்து செய்து விட்டு மேற்படி பத்திரத்தை திண்டுக்கல்லில் உள்ள நோட்டரி பப்ளிக் அட்வகேட்டின் முன்பு பதிவு செய்து விட்டு பத்திரத்தை எதிர்மனுதாரர் மனுதாரரிடம் கொடுத்தார். மேலும், மேற்படி மனுதாருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின் பயனாக எந்த ஒரு குழந்தையும் ஜெனிக்கவில்லை. இவ்வாறாக திருமணம் நடைபெற்ற காலத்தில் இருந்து எதிர்மனுதாரர் மனுதாரரை புறக்கணித்துவிட்டு (Desert) தனது பெற்றோர் வீட்டில் சுகபோகமாக வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார். ஆனால் மனுதாரர் தனிமையிலும், உடல் அளவில் வேதனைப்பட்டு மனஉலைச்சலுடனும் வாழ்ந்து வருகின்றார். எனவே, மனுதாரர் இனிவரும் காலங்களில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எந்த

உத்திரவாதமும் இல்லாத சூழ்நிலை உள்ளதால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 11.11.2018 ம் தேதி ஏற்பட்ட திருமண உறவை ரத்து செய்ய விவாகரத்து பரிகாரம் கோரி (divorce) இம்மனுவியை தாக்கல் செய்துள்ளார்.

03. எதிர்மனுதாரருக்கு கடந்த 22.08.2023 ஆம் தேதி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிர்மனுதாரர் அதனை பெற்றுக்கொண்டு எதிர்மனுதாரர் கடந்த 01.11.2023 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைப்பு இல்லாததாலும், எதிர்மனுதாரருக்கெதிராக ஒருதலைப்பட்ச ஆணை பிறப்பிக்கப்பட்டது.

04.**<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**.

01.இம்மனு அனுமதிக்கப்படவேண்டுமா? என்பதேயாகும்.

05. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. ம.சா.ஆ.1 என்பது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையாகவும், ம.சா.ஆ.2 என்பது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான அழைப்பிதழாகவும், ம.சா.ஆ.3 என்பது திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படமாகவும், ம.சா.ஆ.4 என்பது மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையேயான விவாகரத்து பத்திரமாகவும் உள்ளது. மனுதாரர் மேற்குறிப்பிட்ட முகவரியில்தான் வசித்து வருகிறார் என்பது ம.சா.ஆ.1 மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை பரிசீலினையிலும், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.11.2018–ஆம் தேதி திருமணம் நடைபெற்றுள்ளது என்பது ம.சா.ஆ.2 திருமண பத்திரிக்கை மற்றும் ம.சா ஆ.3– திருமண புகைப்பட பரிசீலனையிலும், மனுதாரருக்கும் மற்றும் எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 25.07.2021 ஆம் தேதி திருமண விவாகரத்து பத்திரம் கையொப்பமாகியுள்ளது ம.சா.ஆ 4 திருமண விவகாரத்து பத்திரத்தின் பரிசீலினையிலும், எதிர்மனுதாரர் எவ்வித காரணமும் இன்றி மனுதாரருடன் வாழ மறுத்தும், திருமணமாகி ஒரு ஆண்டுக்கு பிறகு இருவரும் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்துள்ளார்கள் என்பதும்,

இத்திருமணத்தின் பயனாக அவர்களுக்கு எந்த குழந்தையும் பிறக்கவில்லை என்பதும், அதனால் இனியும் சேர்ந்து வாழும் சூழ்நிலை இல்லை என்பதாலேயே மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பதும் ம.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்தின் பரிசீலனையிலும் அறியமுடிகிறது.

06. எதிர்மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், எதிருரை தாக்கல் செய்யாததாலும், எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டார். இன்றுவரை தோன்றாத்தரப்பினராகவே இருந்து வருகிறார். எதிர்மனுதாரர் தன் தரப்பில் சாட்சியங்களையோ, சான்றாவணங்களையோ முன்னிலைப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி ம.சா.1–ன் முதல் விசாரணை மற்றும் வாய்மொழி சாட்சியம், மனுவுரையின்படி மனுதாரரும் எதிர்மனுதாரரும் இனிமேல் கணவன் மனைவியாக ஒன்றாக இணைந்து வாழும் சூழ்நிலை இல்லை என்றும், அவ்வாறு வாழும் நிலையில் இருவருக்குமிடையே கருத்தொற்றுமை ஏற்படாது என்றும் ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்திலேயே நிரூபணமாகிறது. எனவே, மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரத்தை மனுதாரருக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.11.2018 ம் தேதியன்று நடந்த திருமணத்தை ரத்து செய்து தீர்வு காண்கின்றது.

**07.முடிவில் மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையும், ஆணையுரையும் வழங்கப்படுகிறது.**

01. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.11.2018–ஆம் தேதி கும்பகோணம் தாலுகா திருநாகேஸ்வரம் அருள்மிகு வேங்கடாசலபதி திருக்கோவிலில் இந்துசமய முறைபடி நடந்த திருமணத்தை இந்து திருமண சட்டம் பிரிவு 13(1)(ia)–ன் கீழ் ரத்து செய்து மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரத்தை மனுதாரருக்கு வழங்கி ஆணையிடப்படுகிறது.

02. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த ஆணையுரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S MEENAKSHI
Digitally signed by S MEENAKSHI
Date: 2024.10.03 17:29:29 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திண்டுக்கல்.

**01.மனுதாரர் தரப்பு சாட்சியங்கள்.**

ம.சா.1. திரு.கிருபா (மனுதாரர்)

**02.மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – ஒளிநகல் |
| ம.சா.ஆ.2 | – | மனுதாருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தின் பதிவு சான்றிதழ் – அசல் |
| ம.சா.ஆ 3 | – | மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணத்தின்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் – அசல் |
| ம.சா.ஆ.4 | 25.07.2021 | மனுதாருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையேயான திருமண விவாகரத்து பத்திரம் |

03.**எதிர்மனுதார் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்.** இல்லை.

S MEENAKSHI
Digitally signed by S MEENAKSHI
Date: 2024.10.03 17:29:41 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திண்டுக்கல்.